தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 ஏப்ரல் 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. என். துரைபாண்டியன் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு. 1963 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை நாங்குனேரி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. என். துரைபாண்டியன் அவர்கள் 15—4—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

(2) வினக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்

Pay of workers of Electricity Board.

*4 S. N. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state —

(a) whether any negotiation between the workers and the State Electricity Board on the revision of the pay scales of the workers of the Board was held during April, 1975; and

(b) if so, the details thereof?

[1975 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) வேலை அளவைகளோடு கூடவே, ஊதிய வீதங்களை மாற்றி அமைக்கும் பிரச்சினை குறித்து ஆய்வு செய்வதற்காக, தமிழ் நாடு மின்சார வாரியம் அதிகாரிகள் குழு ஒன்றை அமைத்துள்ளது. 1974 டிசம்பரிலும், 1975 ஜனவரி, மார்ச், ஏப்ரல் திங்கள்களிலும் இக்குழு ஒப்புதல் பெற்ற இரண்டு தொழிலாளர் சங்கங்களுடன் ஏற்கெனவே விவாதங்கள் நடத்தியுள்ளது. மற்ற பதிவான தொழிற் சங்கங்களுடனும் வாரியம் விவாதங்கள் நடத்தக் கருதியுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பாக போர்டு சேர்மனுடன் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை நடத்தி முடியாமல் கனம் அமைச்சரிடமே அந்த சம்பள விகிதத்தை மாற்றி அமைக்க விடப்பட்டதா? அப்படியானால் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கும், நெய்வேலி தொழிலாளர்களுக்கும் என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு இவர்களுடைய சம்பள விகிதங்களை மாற்றியமைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேச்சுவார்த்தை நடந்து கொண்டுதான் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல் இரண்டு தொழிலாளர் சங்கங்களுடன் அந்தப் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறது. மற்றச் சங்கங்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : சில தொழிற்சங்கங்கள் இந்தப் பேச்சு வார்த்தைகள் உடனடியாக தீர்க்கப்படக் கூடாது என்றும், டெல்லியில் இருக்கக் கூடிய கைடு லைன்ஸ் கமிட்டியின் பரிந்துரை வந்த பிறகு இதைத் தேர்தல் நேரத்தில் ஒரு அரசியல் பிரச்சினையாக ஆக்க முயற்சித்து சில சங்கங்கள் காலதாமதம் செய்வது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட சங்கங்களின் போக்கைக் கண்டிக்கக் கூடிய வகையில் அரசாங்கமே இதிலே ஒரு முடிவு எடுத்து உடனடியாக இந்தச் சம்பள விகிதங்களை அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சம்பள விகிதங்களை நிர்ணயிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவி னிடத்தில் இப் பிரச்சினை காலதாமதம் இல்லாமல் முடிக்கப்பட வேண்டும் என்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னொரு பிரச்சினை என்னவென்றால், ஊதிய முடக்கச் சட்டம்

1975 ஏப்ரல் 18]

இப்பொழுது இருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டு தொழிலாளர்களுக்குக் கிடைக்கிற இலாபம் நஷ்டமாகிவிடாமல் இருக்க இந்தக் குழுவிற்கு தெரிவித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலதாமதம் சில சங்கங்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தி வருகின்றன என்று குறிப்பிட்டாலும் கூட, நம்மைப் பொறுத்தவரையில் இதை சீக்கிரம் முடிக்க முயற்சித்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அகில இந்திய ரீதியிலே ஒரு ரெவியு கமிட்டி போட்டிருக்கிறார்களே, அது சமீபத்திலே கூடியிருக்கிறதா? நம்முடைய மாநிலத்திலே இருக்கக் கூடிய சம்பள விகிதத்திற்கும், மற்ற மாநிலங்களிலே இருக்கக் கூடிய சம்பள விகிதத்திற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சம்பள விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டுத்தான் இருக்கிறது. உறுப்பினர் சொல்லிய கைடு லைன்ஸ் கமிட்டி ஒரு தடவை கூடி, மீண்டும் கூடிய தாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : இந்தப் பேச்சுவார்த்தைகளில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டு வருவதால் தொழிலாளர்களிடையே இது சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. அந்தப் பேச்சுவார்த்தையில் இன்னும் காலதாமதம் ஏற்படுமானால் அவர்களுக்கு அட்ஹாக் அமௌண்டாக ஒரு அமௌண்டைக் கொடுத்து பிரச்சினையை அந்த முறையில் தீர்க்க அரசுக்கு சிந்தனை உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இது போன்ற இன்டரிம் ரிலீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தை நடத்தி இப்பிரச்சினையை முடிக்க வேண்டுமென்று சர்க்கார் தெரிவித்திருக்கிறது. அட்ஹாக்காக குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : கைடு லைன்ஸ் கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கு சர்க்காரின் சார்பிலே அவர்கள் செல்லவில்லை. சர்க்கார் அம்மாதிரி போக வேண்டாமென்று உத்தரவு போட்டார்களா? 1—12—74-லிருந்து புதிய சம்பளவிகிதம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் ஆகியிருக்கிறது. அதன் பிறகு இதிலே இவ்வளவு காலதாமதம் ஆக என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும்பொழுது நான் இதுபற்றி சொல்லியிருக்கிறேன். அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று

அவர்கள் நியமிக்கப்படவில்லை. கைடு லைன்ஸ் குழுவிற்கு அமைக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் நம்முடைய அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவில்லை. மத்திய சர்க்கார், எலெக்ட்டிரிசிட்டி போர்டு நிறுவனம் போன்றவற்றை அடங்கியவர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சொன்னது போல் ' It is only advisory ' அவர்கள் கொடுக்கின்ற ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எனவே, அதற்குக் காத்திருக்காமல் முடிவு செய்ய வேண்டும் என்றுகூட நாம் சொல்லியிருக்கிறோம்.

பாதிரிவேடு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 701 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள பாதிரிவேடு-மாதர்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் மிகப் பழுதுபட்டுள்ளமையால், அதை விரைவில் பழுதுபார்க்கும் திட்டம் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இப்பள்ளிக்கும், இதைப் போன்ற பழுதான செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மற்றும் சில பள்ளிகளுக்கும் பழுதுபார்க்க ஆகும் செலவினத்தை எங்ஙனம் ஏற்பது என்பது குறித்து தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) உடனும், பள்ளிக் கல்வி இயக்குநருடனும் தொடர்பு கொண்டு பரிசிலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த உயர்நிலைப் பள்ளியினுடைய கட்டடங்கள் எல்லாம் கூரை உட்பட மிகவும் பழுதுபட்டிருப்பதால் 1973 ஆம் ஆண்டிலே நிவாரண நிதியின் மூலமாக பழுதுபார்க்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. இந்த ஆண்டிலே கட்டடம் முழுவதும் பழுதுபார்க்கப்பட்டுவிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே தலைமைப் பொறியாளரும், பள்ளிக் கல்வி இயக்குநரும் பரிசிலனை செய்தாக வேண்டும். ஆகவே, இருவரையும் விரைவிலே தங்களுடைய அறிக்கையை அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.